ஆறுதல் தேடி அலைகின்ற மனிதா
உலகத்தில் அமைதியேதடா
சாவினைக்கண்டு பயந்திடும் மனிதா
ஈழத்தின் கதையை கேளடா
ஊயிரெல்லாம் தீயில் எரிகின்ற போதும்
உறுதியாய் இன்னும் போராடும் தேசம்
எல்லாற்கும் வழிகாட்டுதே

ஆறுதல் தேடி அலைகின்ற மனிதா
உலகத்தில் அமைதியேதடா
சாவினைக்கண்டு பயந்திடும் மனிதா
ஈழத்தின் கதையை கேளடா

ரத்தமே சிந்தும் பூமி
யுத்தமே என்னும் சாமி
யாரும் யாரும் அதை தீர்க்க வில்லையே
என்ன தான் துன்பம் வந்தும்
எங்களின் பாதை வெல்லும்
என்றிடும் தமிழன் இங்கே தோற்க வில்லையே
உயிருக்கு நிகராய் எதுவும் இல்லை
உயிராலே தானெ ஈழம் விடியும் உண்மை
சொந்த நாட்டுக்காய் சாவது மேன்மையடா
அந்த தியாகத்தை செய்பவன் சாமியடா

ஆறுதல் தேடி அலைகின்ற மனிதா
உலகத்தில் அமைதியேதடா
சாவினைக்கண்டு பயந்திடும் மனிதா
ஈழத்தின் கதையை கேளடா

சுத்திடும் பூமி சொல்லும் மந்திரம் கட்டிடும் மனிதம் கங்கணம்
ரத்தத்தில் தானா வாழ்கை சாத்தியம் யாரிடம் கேட்பது சத்தியம்
அன்பில்தானே வாழ்ந்திடும் உலகம்
என்றிடும் வாய்கள் தீயினிலே
நீதியின் உருவம் ஞாயத்தின் வடிவம்
சொல்லிய வேதம் நோயினிலே
சுத்திடும் பூமி சொல்லும் மந்திரம்
கட்டிடும் மனிதம் கங்கணம்

உயிரினை தியாகம் செய்யும் ஒவ்வொரு விரன் முன்னும்
தேசம் தேசம் வந்து தலை வணங்கும்
தமிழனின் பேரை சொல்லி தனி ஒரு ஆய்வை கூடி
உலகம் உலகம் கூட நிலை தழும்பும்
வாழ்வுக்காய் சாவை தாங்கும் மனிதன் இங்கே
வரலாறு பின்னி விட்ட பயணம் இங்கே
வீரர் சாவுக்கு என்றைக்கும் அர்த்தம் உண்டு
இடம் சாதிக்க வேறெந்த வழிகளுண்டு

ஆறுதல் தேடி அலைகின்ற மனிதா உலகத்தில் அமைதியேதடா
சாவினைக்கண்டு பயந்திடும் மனிதா ஈழத்தின் கதையை கேளடா
ஊயிரெல்லாம் தீயில் எரிகின்ற போதும் உறுதியாய் இன்னும் போராடும் தேசம்
எல்லாற்கும் வழிகாட்டுதே